**O.S.No.18/2017**

பி.வா.சா.1, திரு. ஜபருல்லாகான்
நாள் : 21.01.2025 நேரம் : 02.50 PM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1)1ம் பிரதிவாதி அப்துல்அசன் சேட், 2,8,9 ம் வாதிகளுக்கு எதிராக முன்னெச்சரிக்கை மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி அப்துல்அசன் சேட்டுக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி எனக்கு சாட்சியம் அளிக்க எந்த அதிகாரம் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பொது அதிகார ஆவணத்தில் உள்ள கையொப்பம் 1ம் பிரதிவாதியின் கையொப்பம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பொது அதிகார ஆவணத்தில் உள்ள கையொப்பம் 1ம் பிரதிவாதியின் கையொப்பம் என்பதை நிரூபிக்க நான் தயாராக உள்ளேன். என்னிடம் காட்டப்படும் பொது அதிகார ஆவணத்தில் சாட்சிகள் யாரும் கையொப்பம் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

2)1ம் பிரதிவாதி அப்துல்அசன் சேட் பொது அதிகாரத்தை நிரூபிக்க தயாராக உள்ளேன். 1ம் பிரதிவாதி அப்துல்அசன் சேட்க்கு இவ்வழக்கை மேல் நடத்துவதற்கு எந்தவிதமான ஆர்வமும் இல்லாமல் நான் தான் எதிர்வழக்காடுகிறேன் என்றால் சரியல்ல. நான் தற்போது திடல் பள்ளிவாசல் ஜமாத்தில் தலைவராக உள்ளேன். 1ம் பிரதிவாதி அப்துல்அசன் சேட் எனக்கு பவர் அளித்த காலத்தில் முதுகுளத்தூரில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி அப்துல்அசன் சேட்டின் கடவுச்சீட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளோம். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ஆவணத்தில் எந்த சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சர்வே எண். 36/186 மற்றும் 36/188 உள்ளது.

3)பரமக்குடி உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 193/1965

வழக்கு நடந்த விவரங்கள் எனக்கு தெரியும். மேற்படி வழக்கு 1ம் பிரதிவாதியின் வீட்டுக்கும் மேற்கே வெள்ளையன் வகையறா தாக்கல் செய்த வழக்கு என்றால் சரிதான். 1942ம் வருடம் முகமது அப்துல்லா ராவுத்தர் கிரையம் வாங்கிய விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி அப்துல்அசன் சேட்க்கு மற்றும் அவரது வகையறாவிற்கு தென்வடல் மற்றும் கிழமேல் எத்தனை அடி என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் கிழமேல் 25 அடி, தென்வடல் 6 அடியாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதியின் வழக்கை நான் படித்து பார்க்கவில்லை, அதனால் எனக்கு தெரியாது.

4)காதர் ராவுத்தர் மகன் முகமது அப்துல்லா ராவுத்தர் 1ம் பிரதிவாதி அப்துல்அசன் சேட்க்கு என்ன உறவு முறை என்றால் தாத்தா உறவு ஆவார். முகமது அப்துல்லா ராவுத்தர் 14.12.1942 மற்றும் 05.09.1945ம் வருடம் கிரையம் வாங்கிய பத்திரத்தை தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. மேற்படி ஆவணங்கள் இவ்வழக்கிற்கு முக்கியமான ஆவணம் என்பதால் அதை தாக்கல் செய்தால் தான் வழக்கிற்கு தீர்வு காண முடியும், ஆனால் வேண்டுமென்றே தாக்கல் செய்யாமல் இருந்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ஆவணங்களை வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்ட விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது.

5)மேற்படி இரண்டு கிரைய பத்திரத்தையும் 1965ம் வருடம் நடந்த வழக்கில் 1ம் பிரதிவாதியின் முன்னோர்கள் பி.வா.சா.ஆ.2 மற்றும் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விவரங்களை தெரிந்துகொண்டே ஆவணங்களை தாக்கல் செய்தால் வழக்கிற்கு சாதகமாக அமையும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி அசல் வழக்கு எண். 193/1965 வழக்கில் தீர்ப்பாணையுடன் நீதிமன்ற ஆணையர் விவரம் இணைக்கப்பட்டுள்ளது தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி 1ம் பிரதிவாதிக்கு சகோதரிகள் இருக்கிறார்களா என்றால் இருக்கிறார்கள். மேற்படி 1ம் பிரதிவாதி சகேதரிகளுக்கு வழக்கு பற்றிய விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்கு தனித்து

பாத்தியப்பட்டது என்பதை காட்டுவதற்கு வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை.

6)நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் பாரா 9 ல் தாவா சொத்தும் அதற்கு தெற்கே தொடர்ச்சியான சொத்தும் மற்றும் தனியாக உட்பிரிவு செய்யப்பட்டு சர்வே எண். 36/241 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், 1ம் பிரதிவாதிக்கு தற்போது தெரிய வருகிறது என்று குறிப்பிட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி உட்பிரிவு செய்யப்பட்டதற்கு எந்தவிதமான வருவாய் ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தும் அதற்கு தொடச்சியான சொத்தும் வண்ணார் தெரு வரை உள்ளது என்றால் சரியல்ல. நான் புகைப்பட கலைஞர் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வீடு 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட வீடு என்றால் சரிதான்.

7)மேற்படி என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் ஓட்டுவாரி உள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட வீட்டில் ஓட்டு வாரி கிடையாது என்றால் சரிதான். ஓட்டுவாரி 1 1/2 அடி அகலத்திற்கு இருக்கும் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வீட்டில் தான் 8ம் வாதி சடாச்சரம் வசித்து வருகிறார் என்றால் சரிதான், 4 வருடங்களாகத் தான் வசித்து வருகிறார். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும் சடாச்சரம் 10 வருட காலமாக வசித்து வருகிறார் என்றாலும் சரியல்ல. தாவா சொத்து சர்வே எண்களுக்கு எங்களுக்கு பாத்தியம் என்பதற்கு எந்தவிதமான ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் மைனாரிட்டி சமூகத்தை சேர்ந்தவர்கள் என்று சொன்னால் சரிதான்.

8)தாவா சொத்தில் மற்ற நபர்கள் வரக்கூடாது என்பதற்காக வாதிகள் தான் வடக்கு பக்கம் கல் தூண் ஊன்றினார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்து தற்போது வரை வாதியின் பாத்தியத்தில் தான் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் தரப்பில் 1965ம் வருடம் நடந்த வழக்கின் தீர்ப்பு

மற்றும் தீர்ப்பாணையை தாக்கல் செய்வதற்கு எனக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. நான் வாதிகளின் சொத்தை அபகரிப்பதற்காக நான் மோசடியாக தயார் செய்த பி.வா.சா.ஆ.1 முதல் பி.வாசா.ஆ.5 ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தின் வழியாக வாதிகள் புழங்கி வருகிறார்கள் என்றால் சரிதான். வாதிகளின் பிராதுகளில் ஆட்சேபனை ஏதும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் சரியான நீதிமன்ற கட்டணமும் கட்டியுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல.

9)சுமார் 100 ஆண்டு காலமாக வாதிகளும், வாதிகளின் முன்னோர்களும் தாவா சொத்தை புழங்கி வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கும், 1ம் பிரதிவாதிக்கும் எந்த காலத்திலும் பாத்தியமும், அனுபவம் இல்லை என்றால் சரியல்ல. வாதிகளிடமிருந்து பணம் பறிக்கும் எண்ணத்தில் பொய்யாக வழக்காடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

விசாரணை முடிவுற்ற நேரம்: 04.00 P.M

சாட்சியின் கையொப்பம்.